**<u>முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு</u>**

**<u>O.S.No.400/2019</u>**

2021 ஆம் வருடம் மார்ச் மாதம் 23-ம் தேதியன்று **P.W.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திரு.என்.முரளிதரன்,பி.ஏ.பி.எல்.,** முதலாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அண்ணாவேலு | சமயம் | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**<u>விசாரணை :</u>**

நான் 1 ம் வாதி . என் சாட்சிய ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன் , நான் என் சாட்சிய ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்து தான் அதில் கையொப்பங்கள் இட்டுள்ளேன். 20.9.2017 ம் தேதி பிரதிவாதி எங்களுக்கு எழுதி கொடுத்த அசல் அடமான பத்திரம்தான் Ex.A1. பிரதிவாதி 5.8.2013 ம் தேதி தாவா சொத்தை கிரையம் பெற்றதற்கான அசல் கிரையப்பத்திரம்தான் Ex.A2, பிரதிவாதி Ex.A1 அடமான பத்திரம் எழுதிக் கொடுத்த தேதியில் எங்களிடம் Ex.A2 கிரையப்பத்திரத்தை ஒப்படைத்தார். 27.7.2019 ம் தேதி நாங்கள் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் அலுவலக நகல் தான் Ex.A3,பிரதிவாதி நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 29.7.2019 ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைதான் Ex.A4.தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.